Aragarogara Swami

Muruga · Tamilஅரகரோகரா ஸ்வாமி அரகரோகரா

அரகரோகரா ஸ்வாமி
அரகரோகரா ஸ்வாமி அரகரோகரா

கதிர்க்காம கந்தனுக்கு அரகரோகரா
கந்தப்ப ஸ்வாமிக்கு அரகரோகரா
குன்றில் ஆடும் குமரனுக்கு அரகரோகரா
(எங்கள்) குறவள்ளி காந்தனுக்கு அரகரோகரா

சோலை மலை கிழவனுக்கு அரகரோகரா
சொகுசுக்கார முருகனுக்கு அரகரோகரா
வள்ளி மணாளனுக்கு அரகரோகரா
வான் புகழும் வேந்தனுக்கு அரகரோகரா

உச்சியிலே சடையிருக்க அரகரோகரா
உள்ளங்கையில் வேலிருக்க அரகரோகரா
நெற்றியிலே நீர் இருக்க அரகரோகரா
நிலவும் அய்யா இவ்வூரில் அரகரோகரா

காவியப்ப உன் சோமன் அரகரோகரா
கடுக்கண் அய்யா தங்கநிறம் அரகரோகரா
தேரப்பா தைப்பூசம் அரகரோகரா
(இந்த) தேசத்தோர் கொண்டாட அரகரோகரா